ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2418/27 - 2025 ජනවාරි මස 08 වැනි බදාදා - 2025.01.08

2418/27 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIVP/ANN/LND/ACBOA/1/7/23.
காணி அமைச்சின் இல.: 4-3/18/2020/WS/45.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத் தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில், பன்னல பிரதேச செயலாளர் பிரிவில், மெதபத்து கிழக்கு கோரலே ஹால்பனே கிராமத்திலமைந்த நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப் பட்ட வரைபட இல. க.வ.420578 மற்றும் 2024.03.04 ஆந் திகதிக்கு உரிய கடத்திரல் வரைபடத்தின் காணித்துண்டு இல. 1, தொகுதி இல. 01, பத்திரிகை இல. 01 இனால் குறிப்பிடப்பட்டுள்ள சுமார் 0.2241 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு :

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர் : மீகஹகும்புர; விபரம் : வயல்; உரிமை கோருவோர் : குருப்பு முதியன்சேலாகே ரத்னகாந்தி குருப்பு; விஸ்தீரணம் : 0.2241 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.30

மணிக்கு பன்னல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆர்.எம்.எஸ். விக்ரமரத்ன பண்டார,
பிரதேச செயலாளர்,
பன்னல.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பன்னல,
2024, ஒற்றோபர் 30.

EOG 01 - 0086